25665821 FOUR SUBJECT

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத்தேர்வுகள் – மேல்நிலைத்தேர்வு – கணிதம், இயற்பியல் வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களுக்கான விடைத்தாள்களை ஜெராக்ஸ் நகல் எடுத்தல் மற்றும் மறுமதிப்பீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (வி1) துறை

அரசாணை (பல்வகை) எண். 8,

நாள்: 17.1.2001.

படிக்க:

அரசுத்தேர்வுகள் இயக்குநர் கடித ந.க.எண்.265641/எச்.1/99, நாள்: 10.05.2000.

ஆணை:

அரசு மேல்நிலைத்தேர்வு எழுதும் மாணவ/மாணவிகளுக்கு மதிப்பெண் சான்றிதழ் வழங்கியபின் அம்மதிப்பெண்களில் ஐயப்பாடு ஏற்படின் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை தற்போது நடைமுறையிலுள்ளது. இம்முறையோடு, மாணவ/மாணவிகளின் நலன் கருதி தற்போதுள்ள கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களின் விடைத்தாள்களை மட்டும் ஜெராக்ஸ் நகல் (Xerox Copy) எடுத்துக் காண்பிக்கவும், மாணவ/மாணவிகளுக்குத் தேவைப்பட்டால் அவ்விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப்படலாமெனவும் அரசு தீர்மானித்துள்ளது.

எனவே, நடைபெறவுள்ள 2001, மார்ச் மேல்நிலைத் தேர்வு முதல் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய நான்கு பாடங்களின் தேர்வுகளுக்கான விடைத்தாள்களை மட்டும் மாணவ/மாணவிகள் விரும்பினால் ஜெராக்ஸ் நகல் எடுத்து காண்பிக்கவும், தேவைப்படின் மறுமதிப்பீடு செய்யவும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டமானது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

(i) தேர்வு முடிவுகள் வெளியான பிறகு அரசுத்தேர்வுத்துறை நிர்ணயம் செய்யும் தேதிக்குள் குறிப்பிட்ட படிவத்தில் ஜெராக்ஸ் நகல் எடுப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) ஜெராக்ஸ் நகல் எடுக்க கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூ.50/-ம் மறுமதிப்பீடு செய்ய கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூ.400/-ம் செலுத்த வேண்டும்.

(iii) ஜெராக்ஸ் நகலை பார்த்த பிறகும் விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மாணவ/மாணவி விரும்பினால் குறிப்பிட்ட படிவத்தில் அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணமாகிய ரூ.400/-ஐ செலுத்தி அரசுத்தேர்வுத் துறையினால் நிர்ணயிக்கப்படும் உரிய தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

(iv) மறுமதிப்பீடு செய்யும் இடம், காலம், மறுமதிப்பீடு செய்யும் ஆசிரியர்களின் விவரங்கள் தெரியப்படுத்தப்படமாட்டாது. மறுமதிப்பீடு செய்த பின்னர் அது குறித்த பதில் மட்டும் மனுதாரருக்கு அனுப்பப்படு

(v) மறுமதிப்பீட்டின்போது, இரண்டு மதிப்பெண்கள் வரை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. அதே நேரத்தில் மூன்று மதிப்பெண் மற்றும் அதற்கு மேலும் இருந்தால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ள அதன் அடிப்படையில் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படு ஆனால் தேர்ச்சி பெறாமல் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவ/மாணவிகளை பொறுத்தமட்டில் மேலே தெரிவித்துள்ள மதிப்பெண் குறித்த நிபந்தனை பொருந்தாது. தேர்ச்சி பெறாதவர்களுக்கு மறுமதிப்பீட்டின்போது என்ன மதிப்பெண் வருகிறதோ அதன் அடிப்படை தேர்வு முடிவு நிர்ணயம் செய்யப்பட்டு தேவைப்படின் திருத்திய மதிப்பெண் சான்று வழங்கப்படும்.

(vi) மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜெராக்ஸ் நகல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியா கட்டணத்தொகை குறிப்பிட்டபடி செலுத்த வேண்டும். மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கு மறுகூட்டல் மூலம் மதிப்பெண் ஒன்றோ அல்லது அதற்கு மேலும் கூடுதலாக வந்தாலும் அவர்கள் ஏற்கனவே பெற்ற மதிப்பெண்களோடு கூடுதலாக சேர்த்து வழங்கப்படும். ஜெராக்ஸ் நகல் பெறுவதற்கு மட்டும் விண்ணப்பிப்போர் இச்சலுகையை பெறமுடியாது. இவர்கள் மறுகூட்டல் செய்வதற்கும் விண்ணப்பித்தால்தா இச்சலுகையை பெறமுடியும்.

(vii) விடைத்தாளின் ஜெராக்ஸ் நகலுக்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவ/மாணவிகள் ஜெராக்ஸ் நகலுக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம். தேவைப்படின் மறுகூட்டலுக்கும் மறுமதிப்பீட்டிற்கும் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலகெடுவிற்குள் தனித்தனியே விண்ணப்பிக்கலாம்.

(viii) மறுமதிப்பீட்டின்போது விடைத்தாளில் அதிக குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடைத்தாளை திருத்திய ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ix) தேர்வு நடைபெறும் நேரத்தில் ஒழுங்கீனம் செயல்புரிந்த மாணவ/மாணவியர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள் ஆவர்.

(x) மறு மதிப்பீடு செய்து அறிவிக்கும் மதிப்பெண் இறுதியானது. அதன் பிறகு எதிர்த்து மனு செய்வது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இவ்வரசாணை நிதித்துறை இசைவு பெற்று அரசாணை எண். 116/நி.செ./பி/2001, நாள்.10.1.2001ன்படி வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

எம்.ஏ. கௌரிசங்கர்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
1. அரசுத்தேர்வுகள் இயக்குநர், சென்னை-6
××××××××××××

நகல்: கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

— ஒம் —
பிரிவு அலுவலர்.

/உண்மை நகல்/